1971 அக்டோபர் 22]

முன்னல் அறுவடை செய்து கொள்ளலாம். மற்ற ஆடுதுறை போன்ற நெல்லுக்கு 125 நாட்களிலிருந்து 130 நாட்கள் வரைதான் வயது. ஆனல் 'கருணை' 110-லிருந்து 115 நாட்களுக்குள்ளே அறுவடை செய்து விடலாம். எந்தக் காற்று அல்லது எந்தப் புயல் வீசினலும் அல்லது என்ன மழை பெய்தாலும் அது சாயாது. சாய்ந்து முளைக்காது. இப்போது தஞ்சை மாவட்டத்தில் பயிர் செய்யப்படுகிறது. அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு எந்தெந்தப் பயிர் வகைகளை எப்போது எப்போது சாகுபடி செய்யலாம் என்பதைப்பற்றி விவசாய அலுவலர்கள் ஆங்காங்கு சொல்லி வருகிருர்கள். இப்போது குறுவை அறுவடைக்குப் பிறகு தாளடிக்கு ஐ.ஆர். 8, பொன்னி போன்ற ரகங்களை ஆங்காங்கு பயிர் செய்யலாம் என்றும் மற்றவைகளையும் சொல்லி வருகிருர்கள். சில மாவட்டங்களில் ஐ.ஆர். 8-ஐ மூன்று போகங்களுக்கு நடுவதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். மூன்று போககங்களுக்குச் சேர்ந்தார்போல் தாளடி, குறுவை இவற்றிற்குப் போடுகிருர்கள். அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு செய்யப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு, விவசாய அலுவலர்களை அணுகினல் எந்தெந்தப் பட்டத்தில் எந்தெந்த விதைகளைப் போடலாம் என்பதைப் பற்றிய விவரங்களை அளிப்பார்கள்.

Housing Units

* 28 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state the various Housing Units functioning in this State under the State Housing Board ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கீழ் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மூன்று வீட்டு வசதிப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

திரு. என். டென்னிஸ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் இதன் பிரிவு ஒன்று அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மதுரை வீட்டுவசதிப் பிரிவின்கீழ் கன்னியாகுமரி மாவட்டமும் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரைப் பிரிவின் கீழ் இப்போது எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன ? அவை வாடகைக்கு விடப்பட்டு, சொந்தமாக்கக்கூடிய விஷயத்திலும் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விஷயம் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மதுரை வீட்டு வசதிப் பிரிவின்கீழ் குறைந்த வருமானம் உள்ளோர்க்கு வீட்டு வசதி 294, பயன்படுத்திய தொகை 35 லட்சம் ரூபாய். நடுத்தர வருமானம் உள்ளோருக்கு வீட்டு வசதி 30, பயன்படுத்திய தொகை ரூ. 10 லட்சம். தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கு வாடகைக்கு வீட்டு வசதித் திட்டம் மூலம் 558 வீடுகள், தொகை 35 லட்சம் ரூபாய்.

[1971 அக்டோபர் 22

திரு. கு. திருப்பதி : மிடில் இன்கம் குரூப்பிற்கு ஆண்டுக்குப் பத்து லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்காக அதிகப்படியான தொகை ஒதுக்க அரசுக்கு உத்தேச மிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஒதுக்கப்படுகிற தொகையி லிருந்து ஒவ்வொரு பகுதியினருக்கும் தனித்தனியாக வீடுகள் கட்டுவதற்காக வசதிகள் செய்யப்படுகின்றன. வருகிற விண்ணப் பங்களுக்கு ஏற்றவகையில் தொகை ஒதுக்கப்படுகிறதேயல்லாமல் வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே வீடுகள் கட்டப்பட்டுச் சிலருக்கு வாடகைக்கு விடப்பட்டும், சிலருக்குச் சொந்தமாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. அதில் இன்று அரசின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வாடகைக்கு விடப்படுகிற வீடுகளில் அநேகமாக அரசு அலுவலர்கள் வாடகை வீடுகளில் இருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுக்குக் கால் பங்கு அல்லது அரைப் பங்கு அல்லது முக்கால் பங்கு என்று அந்த நிலத்தின் தொகையைக் கொடுப்பதன் மூலமும், மற்றவற்றின் மூலமும் அவர்கள் வீட்டுக்கு உரியவர்களாகிறார்கள். அதே சலுகை அரசு அலுவலர்களுக்கும் உண்டு.

திரு. சொ. காவேரிமணியம் : நகரங்களில் பணி புரியக்கூடிய அரசு அலுவலர்களுக்கு—சென்னைக்கு மாறி வருகிற நேரங்களில் வீடுகள் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இவ் வாறு வீட்டு வாரியம் அல்லது வீடுகள் கட்டித் தருகிற வாரியங்கள் வீடுகளை இவர்களுக்கு ஒதுக்குவதில் என்னென்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இருக்கிற வீடுகள் வரிசைக் கிரமமாக அநேகமாக எல்லா அரசு அலுவலர்களுக்கும் தரப்பட்டு வருகிறது. தவிர, அரசு அலுவலர்களின் நலனுக்காக வீடுகள் வேகமாகக் கட்டப்பட்டுக்கொண்டு வருகின்றன என்றும் அநேக மாக விரைவில் அவர்கள் குறைபாடுகள் நிறைவேறும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த வீட்டு வசதி வாரியத்தின் கீழ் தொழிலாளர்களுக்குக் கட்டுகிற வீடுகளுக்கு மானியமாக மத்திய அரசின் மூலம் மாநில அரசும் சேர்ந்து ரூ. 500 வழங்கப் பட்டு வந்தது. அது இப்போது தாற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறது. மீண்டும் அந்த மானியத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தொழிலாளர்களுக்கான வீடு களுக்கு மானியம் கொடுப்பதில் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டிருக் கிறது. அதில் தொழில் துறையைச் சார்ந்தவர்கள் இன்னும்

1971 அக்டோபர் 22]

வீடுகள் கட்டிக்கொடுப்பதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். அதைப் பற்றிக்கூட சமீபத்தில் நடந்த கோவை மாநாட்டில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இப்போதுதான் அதைப்பற்றி அவர்கள் சிந்தித்து வீடுகள் கட்ட முன்வருவதாக என்னிடம் வாக்களித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் முன்வருவார்களேயானால் இந்த அரசு அவர்களுக்கு உதவி செய்யத் தயாராகயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வீட்டு வாரியத்தினால் கட்டப்படுகிற வீடுகளில் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்காகக் குறிப்பிட்ட ஒரு சத விகிதம் ஒதுக்கி வைக்க இந்த அரசாங்கம் முன் வருமா? அப்படிக் கொடுத்தால்தான் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை இந்த அரசு உணருகிறதா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் 10 சதவிகிதம் ஒதுக்கி வைக்கப்படுகிறதே தவிர பின்தங்கிய மக்களுக்கு என்று ஒரு பட்டியல் வைத்துக்கொண்டிருக்கவில்லை. அநேகமாக குறைந்த வருமானம் உள்ளவர்கள் என்ற பட்டியலில் பின்தங்கிய மக்களும் வருவார்கள் என்ற காரணத்தினால் அவர்களுக்கு என்று தனிப்பட்ட ஒதுக்கீடுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : வீட்டு வசதி வாரியம் மூலம் பஞ்சாயத்து யூனியன் சிப்பந்திகளுக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்து உதவ அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. இரா. இராமலிங்கம் : லோ இன்கம் குரூப்பில் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள இந்த ஆண்டு எவ்வளவு கடன் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது? நெல்லை மாவட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனிக் கேள்வி போடவும்.

THIRU B. VENKATASWAMI : May I know from the Hon. Minister how many days it will take for a house to be constructed? Is there any proposal before the Government to construct houses quickly as is being done by Thiru G. D. Naidu ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்தப் பிரச்னை ஆய்வில் இருக்கிறதே தவிர அப்படிப்பட்ட வீடுகள் கட்டத் தொடங்கவில்லை. எவ்வளவு நாட்களில் ஒரு வீடு கட்டப்படுகிறது என்பதற்கான விவரங்கள் இல்லை என்ற காரணத்தினால் தனிக்கேள்வி போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the urgency for housing the lowest, lower and middle income groups, is there any proposal under the consideration of this Government to have a housing factory erected in Madras?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குழாய் செங்கற்கள் பிளான்ட் (செல்லுலர் கான்க்ரீட் பிளான்ட்) தொழிற்சாலை ஒன்று இந்த வீட்டு வசதி வாரியத்தால் உருவாக்கப் பட்டு இருக்கிறது. அது தவிர, ப்ரீ-பாப்ரிகேடட் ஹௌசஸ் உருவாக்குவதற்கு என்று ஒரு திட்டம் அரசின் எண்ணத்தில் இருக்கிறது. அது நடைமுறையில் இல்லை என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியம் வீடுகளை நகர்ப் பகுதிகளில்தான் கட்டிக்கொண்டு இருக்கிறது. கிராமப் பகுதிகளில், பஞ்சாயத்து பகுதிகளில் கட்டிக் கொடுப்பது இல்லை. அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம், ரூரல் ஹௌசிங் ஸ்கிம் என்று போட்டு கிராமப் பகுதிகளில் வீடு கட்டும் திட்டத்தை மேற்கொண்டு இருக்கிறது. வேப்பூர், வட ஆற்காடு மாவட்டத்தில், கிராமத்தில் இப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டு இருக்கிறது. இது போல், கிராமப் பகுதிகளில் வீடுகளை அதிகப்படுத்தும் திட்டத்தை அரசு ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையில், தமிழ்நாடு முழுவதும் 18,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். குஜராத் மாநிலத்தில் இருக்கிற அரசுப் போக்குவரத்துத் துறை கார்ப்பரேஷன் (" Own your house scheme ") என்று ஒரு திட்டத்தைத் தீட்டி, அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு எப்படி வீடு கட்டிக் கொடுத்து இருக்கிறார்களோ, அதே மாதிரி ஒரு திட்டத்தை தமிழ்நாட்டில் துவங்குவதற்குரிய திட்டம் ஏதேனும் நம்முடைய வீட்டு வசதி வாரியத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தமிழ்நாடு போக்குவரத்து இலாகா வீட்டு வசதி வாரியத்தை அணுகினால் இது பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த வீட்டு வசதி வாரியம் இந்த மாநிலம் முழுவதும் எவ்வளவு வீடுகள் கட்ட வேண்டி இருக்கும் என்று மதிப்பிட்டு இருக்கிறதா ? இப்போது சில மாவட்டங்களில்

1971 அக்டோபர் 22]

மட்டும் இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதே, இது பரவலாக ஆரம்பிப்பதற்கான அடிப்படை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் எவ்வளவு வீடுகள் கட்ட வேண்டுமென்று கணக்கு என்னிடத்தில் இல்லை. ஆனால் இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 கோடி மத்திய அரசு தரவேண்டு மென்று நாம் அவர்களிடத்தில் கேட்டு இருக்கிறோம். அப்படி கிடைக்கிற பணத்தைக் கொண்டு ஏராளமான வீடுகள் கட்டித்தர இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை நல்ல முறையில் ஆற்றுவதற்காக வடபுலத்தில் பீஹார், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு என்று தனியாக வீடுகள், விடுதிகள் அல்ல, கட்டிக்கொடுத்து இருக்கிறார்கள். அது போல் தமிழ்நாட்டில் இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அரசைப் பொறுத்தவரையில், வீட்டு வசதி வாரியத்திடம் அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், வெளி மாநிலங்களிலிருந்து வந்து நம்முடைய சட்ட மன்ற விடுதிகளில் தங்குகிறவர்கள் அந்த விடுதிகள் மிகவும் சிறப்பாகவும், வசதியா கவும் கட்டப்பட்டு இருக்கிறது என்று சொல்வதை நான் கேட்டு இருக்கிறேன்.

DR. H. V. HANDE: Has the Housing Board any schemes or any practical schemes to see that most of the small houses in areas like T. P. Chatram near Shenoy Nagar, Vyasarpadi and other places—they are now in a very bad shape and most of them are leaking and even the closets are not functioning properly—are immediately repaired—they are 10 years old—and also create some units to see that they are properly maintained and repaired? Are there any repairing units under the acre of the Housing Board and whether they are all functioning properly ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகளைப் பராமரிக்கும் பொறுப்பை வீட்டு வசதி வாரியமே ஏற்றுக்கொண்டு இருக்கிறது. வீட்டு வசதி வாரியத்திற்கு அவ்வப்போது வரும் விண்ணப்பங்கள், குறிப்புகள் மூலமாக ஆங்காங்குள்ள குறைபாடு கள் நிவர்த்திக்கப்படுகின்றன. அவற்றைக் கவனிப்பதற்காக ஒரு பொறியாளரே இருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக அதைக்

கவனித்து நிவர்த்தி செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்படிப் பட்ட குறைபாடுகள் மிகவும் குறைந்த எண்ணிக்கையில்தான் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் இருக்கின்றன என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவரவர்களே, கிராமங்களில் வீடு கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியம் ரூ. 3,000 தான் கடனாகக் கொடுக்கிறது. தற்சமயம் விலைவாசிகள் ஏறி இருப்பதால் ரூ. 1,000 அதிகமாகக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இது கொள்கையளவில் உள்ள பிரச்னையாதலால், இது பற்றி நான் முடிவு தெரிவிப்பதற்கு இல்லை. அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வர இருக்கிறேன் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : The Hon. Minister in his answer was saying that they are engineers who are doing it. I have seen many of these houses. They are about to collapse. In view of that and in view of the fact that it is better even in the interests of the Housing Board itself that these things are prevented before actually petitions are received, will the Ministry be prepared to have a small unit to go and inspect these houses and see that these houses are safe? Otherwise the Housing Board will be put to a lot of loss after 3 or 4 years. Are they prepared to create some units to go round these houses and see that things are forestalled and immediate action is taken to see that these houses are repaired before petitions come forward? They may not also know that they are entitled to give petitions.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, சில பகுதிகளில் நிறைய குறைபாடுகள் இருப்பதாக திரு. ஹாண்டே அவர்கள் தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைபாடுகள் எங்கெங்கே இருக்கின்றன என்று கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால், அதற்கான நடவடிக்கை எடுக்க ஆணை யிடுகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, முதலிலே அரசாங்கம் தன்னுடைய சிப்பந்திகளுக்கு வீடு கட்டிக் கொடுக்க முன்வர வேண்டும். குறிப்பாக, போக்குவரத்துத் துறையிலே இருக்கிற ஊழியர்களுக்கு வீடுகட்டித் தருவதற்கு என்று ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது. முதலிலே அந்தச் சிப்பந்திகளுக்கு வீடுகட்டிக்கொடுக்க அரசு முன்வரவேண்டும். வட சென்னையில் இட நெருக்கடி அதிகம். வீடுகள் கிடைப்பது இல்லை. அப்படியே கிடைத்தாலும் முன்

1971 அக்டோபர் 22]

பணம் அதிகம் தரவேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு, வடசென்னையில் இருக்கும் மக்களுக்கு விடு கட்டித்தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்திடம் பணம் வந்து விட்டால் வீடு கட்டத் தொடங்கி விடுகிறார்கள். பணம் மற்ற இலாகாவிலிருந்து வந்து விட்டால் உடனடியாக விடு கட்டிக்கொடுக்கிறோம்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, விடு கட்டுவதற்கு இந்த வாரியத்திற்குப் பணம் கிடைக்கக் காலதாமதம் ஏற்படுகிறது. போதிய பணம் அரசு ஒதுக்குவது இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, எல்.ஐ.சி. மூலம் கடன் பெற்று, அதன் மூலம் விடுகள், நடுத்தர மக்களுக்கும், சாதாரண மக்களுக்கும், கட்டித்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, எல்.ஐ.சி இப்படிப்பட்ட விடுகள் கட்டுவதற்குக் கடன் அளிக்கிறது என்றாலும், அது பெரும் தொகையாக இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த ஆண்டு கூட 1½ கோடி ரூபாய் எல்.ஐ.சி.-யிடமிருந்து கடனாக வீட்டு வசதி வாரியம் பெற்றிருக்கிறது. இருந்தாலும் தமிழ் நாடு பூராவிலும் நல்ல விடுகளைக் கட்டித்தர அந்தப் பணம் போதவில்லை. குறைந்த பண வசதிதான் கைவசம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. வினாக்கள் 16, 29, 30 ஆகியவை மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளின்படி தள்ளி வைக்கப்படுகின்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு.

திரு. நா. காசிராமன் சார்ந்த கட்சியின் பெயர் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் விவகாரமாக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று பெயரிடப்பட்ட தாளில் தமிழ்நாடு செயலாளர் திரு. எஸ். எல். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கீழ்க்கண்ட கடிதத்தை எழுதி இருக்கிறார்கள்.